


# 2000

# நெஞ்சம் மறப்பதில்லை



மட். அரசினர் ஆசிரியர்
கலாசாலை
மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* கலகம் பிறந்தால் ஞாயம் பிறக்குமாம்
நாரதரே – ராஜதுரை – நீ
நியாத்திற்காக கலகம் செய்வாயா?

* பட்டமரத்தைத் தேடி பறவைகள் வருவதில்லை – ரங்கன்
நன்கு பழுத்த மரம். – அதுதான் பறவைகளின் கூட்டம்
கவனம் – கல்லெறியும் விழலாம்.
கற்பனைக்கு கலைவடிவம் தரும் – சந்தியா லக்சுமி
கற்பனைத் தொழிற்சாலை – கனவுகளும் விற்பாயோ...?

* உள்ளத்து உணவர்வுகள் நீ தந்தாய்
நடனமொழி உண்மையென்றால் – திருமதி பிரபா?
நீ சொல்லாததையும் நாமறிவோம்...!

* நீருக்கும் மீனுக்குமுள்ள உறவு
வேருக்கும் மண்ணுக்கும் உள்ள தொடர்பு
இவர்களுக்கும் எமக்கும் உள்ள உறவு

* நிரஞ்சினி, வரலட்சுமி,
மலர்மதி, சத்தியபாமா,
கமல்மோகனதாஸன், தமிழ்செல்வி
ஜெயக்குமார், நாகராஜா
மோகன்தாஸ், வேல்முருகநாதன்
சுபதர்ஷினி.

* இளநெஞ்சங்களே.......
திசைக்கொருவராய் நாம் – பிரிந்து வாழ்ந்தாலும்
உங்களெல்லோரையும் – நினைவு கூர்கிறோம்
உயிர் கலந்த நாம் – உணர்வுகலந்திருப்போம்!.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* பொங்கி எழுதுவதிலும் புது நியாயம் கேட்பதிலும்
யதார்த்தவாதி - நீ புகழ் - புகழேந்தி !

* மாடிவீட்டுக் கண்கள் பூத்துக்கிடக்கின்றன - இப்போதும்
மைதானத்தில் தயாநிதி உன் சாகஸம் பார்க்க - வா?

* (அ) இக்கரை - யாலும் நீ அழகன்
பாங்காய் நட்புறவு கொள்வதிலும் பண்பாளன் - கமலவன்
நடமாடும் பென்சி ஹவுஸ்.

* கணனிப்பிரியா - ரகு - நீ கன்னி வைத்த கனவு எதுவோ?
காலம் கனியும் - காத்திருப்பாயா?
பரமேஸ்வரா ! கல்லூரியில் நாயகன் - நீ
நயம்பட உரைப்பதிலும் - நன் நடை பயில்வதிலும் நாயகன் நீ

* பல்கலை மைந்தன் சூட்டி பைந்தமிழ் சிரிப்பொலியால்
உள்ளம் கவர் கள்வா!
பிள்ளை மனம் எல்லை கடந்ததா?
சர்வதேச ரீதியில் நீ - வாழி (ளி) !

* அடையாள அட்டை தந்த கேசவா
கல்லூரியின் அத்தனை துறைகளிலும் - உன்னை
அடையாளப் படுத்தி கொண்டாய் - (அ) இப்போதைக்கு ஏதுவழி?

* வளர்பிறையும் தேய்பிறையும் நிலவுக்கு மட்டுமல்ல - மதி
உன்வரவுக்கும்தான் அதெப்படி - உன்
திடீர் செய்தி மட்டும் இன்ப அதிர்ச்சிக்குள்ளாக்குகிறது?

* நட்புறவை நயமாய்ச் சமன்
செய்து பேணுவதில் ரஜீவன் தராசுதான்.

* போதனையிலும் சாதனையிலும் பேதமை பாராட்டாதவன் -
லோகநாதன் - ஆட்சிமன்றத்திலும் - தன்
ஆளு- மையை உறுதிப்படுத்தியவன்.

* சக மாணவர்களை வழிநடாத்துவதில் - சுதாகரனும்
ஒரு படைத்தளபதி தான் - படைநடத்தத் தயாரா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* கபாலபதி மைந்தா - திரேரா
இலக்கியப்பரப்பில் முன்னேறிப் பாய்ந்தவனே
புதுயுகம் படைத்தாய் - புத்தாயிரத்தில்

* முகங்களில் தெரியுமா மனங்கள் - என்ன கஜேந்திரா?

* பாரதிகண்ட புதுமைப்பெண்ணோ? - ராதிகா
திக் கெட்டிலும் உன் எதிரொலி - இங்கே தென்றலும் புயலாகிறது!

* சுட்டுவிரல் கட்டைவிரல் ஆனதோ - நிர்ஷினி
தொலைபேசியைச் சுற்றி சுற்றியே ஆனாலும் சாதித்து விட்டாய்!

* பொறுமையில் பூமாதேவியின் மறுவடிவங்கள் - இவர்கள்
கல்லூரியில் இரட்டையர்கள்
திலகராஜினி, நிதிவாசினி - பொறுத்தார் பூமி ஆள்வாரா?

* உபசரிப்பதில் - தமிழ்ப்
(பெ) பண்பாடு தெரியும் - மங்களேஸ்வரியிடம்
தலமை ஏற்பதிலும் உ(ட)ன்பாடு தெரிந்தது.

* ஆடுகளத்தில் அதிரடி நாயகனே! - முரளி
நீ யென்ன முத்தையாவின் வழித்தோன்றலா?

* றொபின்சன் ஒரு நடனப்புயல் - ச்சா
நாட்டுப்புற நடனத்தென்றல் தான்.

* கருமமே கண்ணாய் இருந்து - கண்ணாளன் - ஜெயகாந்தன்
கரைசேர்ந்து இரு மாங்காய் அடித்துச் சாதனை செய்தவன்.

* நெற்றியில் பொட்டழகா - ரவி
பிறருக்கு உதவுவதிலும் - நட்புறவு பேணுவதிலும் நீ பேரழகனடா.

* கௌரி கலாசாலையில் நீ லங்கா புவத் - பயில் நிலையில் தான்
(போ) புகும் இடத்தில் றொயிற்றர் தான் - சந்தேகமேயில்லை.

* தபால்காரனின் ஓசை கேட்கும் போதெல்லாம் - யோகேஸ்வரி
உன் நினைவும் வந்து போகும் - தபால் காரன் தெய்வமாவானோ?

* தவழ்ந்தது தாயின்மடியில் தான் என்றாலும் - வரதா
கல்லூரியிலும் நீ மழலையடி!-இனி வளர்ந்துவிடு - வாழ்த்துகிறோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* கூடிக்கொடுத்து உண்பதில் சுபாஷினியும் காக்கை ஜாதிதான்!
தர்மம் தலைகாக்கும்

* பவளராணி கற்றதை மற்றவர்க்கும் புகட்டிப்படிப்பதில்
பவளம் தான்.

* மனதுக்குள் பூட்டிவைத்த சங்கதிகள் எத்தனையோ - சாலினி
என்றாலும் (வெ) பிள்ளை மனமடி உனக்கு!

* கார்த்திகைப் பெண்களின் கலகலப்பாய் -யோகேஸ்வரி
அத்தி பூத்தாற்போல் - தவமலரின் புன்னகையும்
பட்டிப்பூவாய் -உஷானந்தினியின் அமைதியான காத்திருப்பு;
கௌரியின் கனவுகளும் கண்முன்னே என்றும் நிழலாடுமே!

* அன்பைச்சொரிவதில் அட்சயபாத்திரமாய் - வரதராணி
ஆட்பாட்டத்திலும் ஒழுங்கைப் பேணுவதில் - கல்யாணி,
நேசமுடன் கரம்பற்றி கொள்வதில் - நேசமலர்
கூட்டணியுடன் ஓரணி சேர்ந்தவர்கள்.

* கற்கண்டாய் கற்பதில் - ரஜனி
கனிவாய் உறவாடுவதில் - சாருலதா(நீ இலைமறை காயல்ல)
உற்சாகத்தின் சிகரமாய் ஜீவா
மொத்த சந்தோஷத்திலும் குத்தகைக்கு எடுத்துக்கொண்ட
வாசுகி - வாருங்கள் வடம் பிடிப்போம் - தேர் இழுக்க.

* வெண்கொற்ற குடையின் கீழ்
இரு அமைதியான வெண்புறாக்கள் - காத்திருக்கின்றன!
சுபாஷினி + சுமதி - இனிப் (ம) பறக்கலாமே?

* காத்திருக்கிறாள் அன்னமாய் - நளாயினி
தூதுசெல்வாயோ?சேதி - நாம் சொல்வோம்.

* மௌனம் என்னும் தேன்மொழிபேசி - கலாராணி
புதுமலரே - சுனித்தா இருவருக்கும் வெள்ளி திசை பிறக்குதாம்

* ரோசாவே .................. ரோசாவே
சிங்கராஜவே ...........ராசாவே
உன் கானம் என்றும் இனிக்குமடா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவினிக்க பேசும் புன்னகை மன்னா!
கனியிருக்க காய் உண்ணும் - டெனிஸ் கண்ணா

கல்லூரியின் தேனிசைத் தென்றலே - மரியான்
கானப்பாடல் இசைப்பதில் நீயும் ஒரு தேவா தான்.

கொடும் குணம் தவிர்த்து - பனிவிழும் குளிர்பார்வை புரியும்
கோணேஸ்வரி ஞானமதில் உதித்ததுவோ?

பலர் கரிசனை பெறவந்த - சுபதர்ஷினியே
உன் பார்வையே ஒரு வரம் - தளிர் மகவான தங்கையே!

முந்தா நாள் முளைத்த முணுவல் அல்ல
சாந்தமலர் உதிர்த்திட்ட புன்னகைகள்.

கானமயிலாட்டம் பார்க்கவில்லையா - கேஷினி
உன் ஒயிலாட்டம் பார்த்தோம் அதுபோதுமே!

உள்ளத்தில் குழந்தையே க. பிரமிளா
கள்ளத்தை மனதில் காட்டாத கண்மணியே

கார்மேகம் கருமை கொண்டால் மண்ணில் பசுமை தான்
திருமதியே யோகேஸ்வரி உன் - உள்ளம்
கமலமடி - பூஜைக்கு ஏற்ற பூவே.

மொழிக்கையாட்சிக்கு - பிரதீப்பிடம் இல்லை தட்டுப்பாடு
இருந்தும் புன்னகைக்கு ஏன் இந்த கட்டுப்பாடு.
கையெழுத்தின் முத்தைப்போல் காதல் பித்தும் வாழி!

களுத்துறை - ஜெயா, கடைச்சாப்பாட்டு சந்திரா
பக்திசிரத்தையில் நீயே ஜெயச்சந்திரா

விஜயனுக்குத் தேரோட்டிய பார்த்த சாரதியே - சரவணா
ஆருடம் சொல் - வெல்லுமா குரு - ஷேத்திரம்?

அர்ச்சகர் இல்லாவிடினும் - பிரபா
ஆராதனை செய்திடுவான் - உன்னை
ஆராதிக்கிறோம் அன்பாய்.

இளந்திரையனின் இருப்பு
இளநகையால் என்றும் பேசப்படுமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* இசையால் வசப்படுத்திப் - பரவசப்படுத்தும்
கலை தெரிந்தவன் யோகானந்தன்
கலை வண்ணம் காண்பாயா?

* பாரதியின் கண்ணம்மா - இந்த
இளைய பாரதிக்கு வாய்த்தான் கண்ணாளன்
கருத்தொருமித்(த) தால் வாழ்ந்திடுங்கள்!

* பனிக்கால வேளையிலே - சுனித்தா உன் குரலோசை கேட்டு
விழித்தோர் தொகைபோல் இனி - விழித்தெழுவோம்.

* நிழல்பரப்பும் உன் முகம் - நிரஞ்சன் என்ற பெயர் தினமும்
சிறகடித்து பறக்குதடா சிட்டாக மோட்டாரிலே.

* கமலம் இவன் கண்கள் - அமலன் இவன் பெயர்
அகிலம் புகழும் செல்வன் அமைதியாக காத்திருக்கிறான்
போலும் - ஓடுமீன் ஓட உறுமீன் வரும்வரை.

* நானிலம் பயனுற வாழ்வதற்கு - நாகேந்திரா
நயம்பட உரைத்திடுவான்.

* அமைதிப் புயலை அம்சமாய் உருவாக்குவதில்
புஷ்பராஜனும் சந்திரதேவனும் பங்காளிகள்
புயலுக்குப் பின்னும் அமைதியா?

* சிரிப்புக்குப் பஞ்சமிருக்காதாம் - கல்லூரி விடுதியிலே!
சந்திராவும் + இந்திரலதா + புஸ்பலதா
கூட்டுறவு சேர்ந்தால் - நாட்டுயர்வுக்கும் சிரிப்பூட்டுங்களேன்.

* ஆளுமையில் ஆதவனாகி
அமைதியாய்ப் பணிவதில் குளிர்நிலவாகினாய் - சுபாஷினி
என்ன குளிருதா? ஒளிந்து கொள் மே (ர)கத்துள்....!

* தட்டுங்கள் திறக்கப்படும் - பரமசாமி
வெற்றிக்கொடி கட்டுங்கள்.

* ஜெய .... ஜெய .... ஜெயமே!
ஜெபதேவா ...... ஜெயமில்லையேல்.......! பயமில்லையே....!

* அளவுகோல்களையே அதிகம் நேசிக்கும் அறிவு ஜீவியே!
பிரான்சிஸ் - சிலிர்க்கின்றது உன் குரலோசை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியாய் அநாதியாய் அவதரித்த செந்தமிழை - நம்
தமிழாய் வளர்த்தெடுத்தவனே மனோகரா.

அடிமுடி தேடிக் களைத்தனர் திருமாளும் விஷ்னுவும்
ஜெய்சங்கரும் பரமேஸ்வரனும் எதைத்தேடினீர்கள்....?
சிவராதிரியிலும் ரெடிமேட் தூக்கமா?

தேவதூதன் வருகிறான் - அதோ
தேவராஜன் - கனவிலல்ல நிஜமாய்...........?
வ்வியமாய்ப் பண்ணிசைப்பதில்
மதனிகாவும் திவ்வியமலர் தான்.

குறுகில மன்னா - பிரின்ஸ்
வெம்மையிலும் செம்மையாய் வளர்ந்தவனே!
அனுபவங்களின் சேமிப்பின் மொத்தவடிவமாய் பஞ்சாட்சரம்
தருமனின் நடப்பு - தருமலிங்கம், இவனுக்கும் உண்டு - தயவுகூர்க.

கலர்கலராய் கனவு கண்டாலும்
லவீந்திரன் - நிஜமாக்கித் - தானும் கலகலப்பான்!
அடைகாக்கிறார்கள் (உ) அம்சமாய்
உமையேஸ்வரி - திலகராணி பொன்முட்டை இடவோ?

* சிம்மக் குரலெடுத்துப் பாடுவதில் - நிரஞ்சனும் இங்கு ஒரு S.P தான்.
சரி ............. கூட்டம் வைக்கப்போறான்!

* வின்ஸ்டன் - நீயும் சிலுவை சுமக்கிறாயா?
கர்த்தரே ஆசீர்வதியுங்கள் - கல்லூரியில் தேவமைந்தன்.

* தன்னலம் கருதாமல் பொதுநலமா - பொதுநலனிலும் தன்னலமா?
வாருங்கள் வரைவிலக்கணம் கேட்போம் திலகேஸ்வரனிடம்.

* புன்- நகை அணிந்த வந்த - ஜெயந்தி
உறவாடி நடமாடும் புன்னகை அரசி!

* தொட்டாற் சிணிங்கியே திருமேனி - இனி
தொட்டுவிடு ...தொலைதூரம் இல்லை தொடுவானம்.....

* பனைநிகர் ஒத்த தோ(ளா)ழா ! ராஜாஜி!
பனையையும்பிரட்டும் உன் மாயமென்ன? இரகசியம்சொல்லாயோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* வளருவை துக்கு வாய்த்த வாசகியாய் இந்த - தேவராணி
உன்வள் ளுவனும் வாழ்க.

* பிகாசோவின் 'கண்ணீர் குழந்தை" காவியம் படைத்தது.
மதிவதனி - உன் விழித்தூரிகையின் ஓவியமும்
உயர்பெறும் - ஓர் நாள்.

* சங்கத்தமிழ் நான்காம் - கணனியையும் சேர்த்து
உலகம் சுற்றும் கணனிப்பிரியனுக்கு கன்னி வைத்தவள் -
ஜெயகாந்தி வேண்டாமே - தலையணை மந்திரம்.......... விட்டுவிடு

* சுபமாய் - நிறைவு செய்தாய் - பயிற்சியை - சுதர்ஜினி
டெனிஸ் ஆட்டத்தில் எப்போது ஜெயிப்பாய்? சொல்லியனுப்பு

* அன்னையின் கருணையை வினோதினியிடமும் காணலாம்.
அனிச்சை மலர்ப்பூவே - செல்வமலர்
இலக்கினை அடைவாயோ?

* குயிலின் கூட்டில் - சிலவேளை காகங்களும் முட்டையிடுமாம்.
இளந்திரையனும் சிவசங்கரியும் ரத்த சொந்தங்கள் - இனி
புதுப்பரணி பாடிடுவார்கள்.

* அத்தனை துறையும் சந்திரேஸ்வரனுக்கு அத்துப்படி
அதெப்படி - மோட்டார் சைக்கிளில் சிட்டாகப் பறக்கிறாய்.
கொண்வேக்குப் பாதுகாப்பா?

* தரணிதரன் மனமறிந்து உதவுவதில்- சுட்டதங்கமடா?
உன் தவம் - மலர்- கையிலா....?
கோகுலத்து கண்ணா - கோகுலன்ராகலையில் ராதை உனக்காக
வெண்ணை திருடிக்கொண்டிருக்கிறாள்.

* சிவப்பிரகாஷ் மண்ணில்போட்டது உடனே முளைக்குமா?
பூக்குமா? ஆனால் - நீ கேட்டது கிடைக்கும்.

* இடுக்கண் களையும் நண்பனே - றொபின்சன்.
பேருக்கு நீ - வினித் - இனித் தேசமெங்கும் காதல் தானே....?

* இரட்டைக் குழந்தை பெற்றெடுத்ததால்
சசிக்கு - ஆனந்தம் தான்
காய்தல் உவத்தலற்ற மருத்துவன் ஆனந்தக் குமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்மத்தின் தலைவனே தர்மலிங்கம்
பானம் தருகிறேன் ........... தானம் தா?

பூரணை நிலவில் கறையா.........
து. சசிகலா - வரட்டும் சிவராத்திரி
புது நிலவை வார்ப்போம்.

அற்புதமானவள் ஆன்லெம்பே
உள்ளம் நொந்தால் - சோகம் சொல்லாம்.

நாகராஜன் + சுவேந்தினி
ராமாயணம் படித்து வாழ்ந்தது போதும் - இனி
மாமனும் மாமியுமாய் உங்களைப் பார்த்து
ராமாயணம் வாழட்டும் என்ன .... த(ா)யாரா?

பஞ்சு முகில்கள்- கொஞ்சி விளையாடும்
குறிஞ்சி நிலச் சிட்டே - க. பிரம்மிளா
செயல் மின்னலே - வெட்டாதே.

பூக்களிற் சரசமாடி - தோள்தொட்டு
பிடரிசிலிர்த்து மீண்டும் தோள்தொட்டு செல்லும் - எம்
தேசக்காற்றில்
திருமதி புஸ்பநாதன்
திருமதி உதயகுமார்
திரு. வேல்முகநாதன்
செல்வி மங்களேஸ்வரி, ஜெயலோஜினி - உங்களது
உள்ளத்து உணர்வுகள் வந்து மோதும் - உம் உள்ளம் புரியும்
எமக்கு!

நெஞ்சங்கள் (அ) மறப்பதற்கில்லை - மகேஸ்வரன்
எங்கே ஒரு கடி ஜோக் சொல்லு பார்ப்போம்.

(க) சலசலத்து கலகலத்து ஓடிக்கொண்டிருக்கும் ஆற்றில்
புனித வானியின் சாயலையும் சற்றுக்காணலாம்.

மருதநிலைமங்கை - சிவகுமாரி
குளிர் நிழல் தரும் மருதமரக்கடவுளா?
எட்ட நின்றாலும் சுடாத நிலவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்று வைத்து — நீங்கள் படித்து
பாரில் எட்டு வைத்து — நீங்கள் நடந்து
ஒட்டி நிற்கும் மடமைதனை — எட்டி
நின்று நீங்கள் உதைத்து
கட்டிக்கிடக்கும் ஆசைகளை — நெஞ்சில்
கட்டிக்கிடக்கும் ஆசைகளை
வேட்டு வைத்துத் தகர்த்திடாமல்
முட்டி — நீங்கள் இலட்சியத்தை
முழுமூச்சாய் வென்றிடவே
பவ்வியமாய் — நாம் பணிந்து
திவ்வியமாய் — நீங்கள் வாழ

வாழ்த்துகிறோம். — இன் நன்நாளில் (நவம்பர் இருபது)
வாழ்த்துங்கள் — நெஞ்சங்களே....

**வாழ்த்துக்களுடன்**
**முதலாம் வருட ஆசிரிய மாணவர்கள்**

***அரசினர் ஆசிரியர் கலாசாலை***
***மட்டக்களப்பு***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இள நெஞ்சங்களே............

இளமையும் வாலிபமும்
வாழ்க்கையில் இனிமை நிறைந்த
காலங்கள் – இளமையிலேயே
இதயங்களைப் புனிதப்படுத்திக்கொண்டோம்!

உருகித் திரியில் எரியும்
மெழுகின் ஒளியாய்த் திகழ்வோமே!

மனிதர் உணர்வை மனிதர்
மதிக்கும் – உன்னதமான
மனிதப்பண்பாட்டை வென்றெடுப்போம்!

**1ம் வருட ஆசிரிய மாணவர்கள்**
**மட்/ ஆசிரிய கலாசாலை**
**மட்டக்களப்பு**
**2000**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org